1975 நவம்பர் 7]

ஆத்தூர் முல்லைவாடி சாலையில் பாலம்.

*240 வினா—திரு. வி. பழனிவேலு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தலைவாசல், ஒன்றியம், ஆத்தூர் ஒன்றியம் இரண்டின் எல்லைக்கோட்டில் உள்ள ஆத்தூர்-முல்லைவாடி வழி காட்டுக்கோட்டை பாதையில் கட்டாறு என்னுமிடத்தில் பாலம் கட்டும் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

திரு. வி. பழனிவேலு: ஆத்தூர் ஒன்றியம், தலைவாசல் ஒன்றியம் ஆகிய இரண்டின் எல்லைக்கோட்டில் காட்டுக்கோட்டைப் பாதையில் கட்டாறு என்னுமிடத்தில் காட்டாற்றில் தண்ணீர் வருகின்ற நேரத்தில் இருபது முப்பது கிராமங்கள் பாதிக்கப் படுகின்ற சூழ்நிலை இருப்பதால், இதை அரசு பரிசீலனை செய்து அங்கே பாலம் கட்டிக்கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தக் கட்டாறு என்கிற காட்டாற்றுக்குப் பாலம் கட்ட ஒரு லட்சம் செலவாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வருங்காலத் திட்டங்களில் இதைச் சேர்க்கலாமா என்பது பற்றி யோசிக்கப்படும்.

திருப்புவனம் ஒன்றியப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள்.

*241 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் வேலை செய்யும் அலுவலர்களுக்கு குடியிருப்பு கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா: திருப்புவனம் ஒன்றியத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு அங்கே வீடு கிடைக்காது, மதுரையில் குடியிருந்துகொண்டு வருவதால் அலுவலகத்திற்குச் சரியான

நேரத்தில் வர முடியாது இருக்கிறது. ஆகவே இனிமேலாகிலும் திருப்புவனம் ஒன்றியத்தில் வேலைசெய்யும் அலுவலர்களுக்கு அங்கேயே வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அலுவலர்கள் சரியான நேரத்தில் அலுவலகத்திற்கு வரவில்லையென்றால் மிசா சட்டம் இப்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனால் வீடு கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

அறநிலைய நிதி.

*242 **வினா—திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-74, 1974-75 ஆம் ஆண்டுகளில் அறநிலைய நிதியின் கீழ் எவ்வளவு தொகை சேர்ந்துள்ளது?

(இ) இந்த நிதி எந்த முறையில் செலவு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) 1973-74-ம் ஆண்டில் அறநிலைய நிதியின் கீழ் ரூ. 76,91,456.63 சேர்ந்துள்ளது. 1974-75-ம் ஆண்டின் நிதிக் கணக்குகள் சென்னை கணக்காய்வுத் தலைவரால் இன்னும் முடிவாக்கப்பட வில்லை.

(இ) இந்து சமய அறநிலைய நிதி அத்துறையைச் சார்ந்த அலுவலர்களின் சம்பளம் மற்றும் இதர படிகளுக்காகவும், செயல் அலுவலர்கள், தணிக்கைத் துறை அலுவலர்கள் சம்பளம் மற்றும் இதர இனங்களுக்காகவும் செலவு செய்யப்படுகின்றன.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: எண்டோமெண்டு கமிஷனரிடம் ஒரு தனி நிதி இருக்கிறது. ஒவ்வொரு கோவிலும் அதற்கு என்று ஒரு தொகையை அனுப்பி வைக்க கோரப்பட்டிருக்கிறது. அந்த நிதியை அவர் இன்ன இன்னமுறையில்தான் செலவு செய்ய வேண்டும் என்பதற்கு வரைமுறைகள் இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இது அறநிலைய நிர்வாக நிதியைப் பற்றிய கேள்வியாகும். மாண்புமிகு உறுப்பினர் ஆணையர் வைத்திருக்கிற பொதுநல நிதியைப்பற்றிக்